தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# விவசாயமும் சுற்றுச்சூழலும்; பள்ளியில் விழிப்புணர்வு

**கோவை, நவ. 30–**

கோவை கரும்பு இனப்பெருக்க நிறுவனம் சார்பில், பிரீமியர் வித்யவிகாஷ் மேல்நிலைப் பள்ளியில், விவசாயமும் சுற்றுச்சூழலும் என்ற, மாணவர்களுக்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது.

முகாமில், பள்ளி மாணவர்களை இரு குழுக்களாக பிரித்து, வினாடி–வினா போட்டிகள் நடத்தப்பட்டன. விவசாயம் குறித்த சொற்கள், விவசாயத்தில்



முத்திரை பதித்த கொங்கு மண்டலத்தை சேர்ந்த புகழ்பெற்ற ஆளுமைகள், விவசாயம் தொடர்பான புவியியல் குறியீடுகள், அறுவடை திருவிழாக்களின் பெயர்கள் உள்ளிட்ட, பல்வேறு தலைப்புகளில், போட்டிகள் நடத்தப்பட்டன.

நிறுவனத்தின் இயக்குனர் ஹேமபிரபா கூறுகையில், '' நாட்டின் முதுகெலும்பு விவசாயம் தான். வேளாண் கல்விக்கு, இந்தியாவிலும், வெளிநாட்டிலும், தேவைகளும், வேலைவாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. ஸ்டார்ட்–அப் மூலம், வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும். பள்ளி மாணவர்கள், வேளாண் கல்வியில் சேரும் முன்பு, துறை வாரியாக உள்ள, வாய்ப்புகளை அறிந்து கொள்வது அவசியம்,'' என்றார்.

முகாமில், பயிர் பாதுகாப்பு துறை தலைவர் டாக்டர் விஸ்வநாதன், முதன்மை விஞ்ஞானி புத்திரபிரதாப் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.